## அணைக்கட்டுப் பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடல் செயற்திட்ட - 2014

அணைக்கட்டுப் பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடல் செயற்திட்டத்தின் (டிஎஸ்டபிள்யூஆர்பிபி)) 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2006 மார்ச் 16 ஆந் திகதிய கியூ 5200 ஆம் இலக்க கடன் உடன்படிக்கை, 2006 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய ரீஎவ் 056901 ஆம் இலக்க மானிய உடன்படிக்கை மற்றும் 2008 மே 01 ஆந் திகதிய சீஈ 4406 ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கை என்பவற்றுக்கான பொது நிபந்தனையின் 4.09(பீ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

அணைக்கட்டுப் பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடல் செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் படி, முன்னாள் நீர்ப்பாசன, நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சும் தற்போதைய மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. செயற்திட்டத்தின் குறிக்கோள்களாவன, (1) அணைக்கட்டுப் பாதுகாப்பு மற்றும் செயற்பாட்டு வினைத்திறன் முன்னேற்றங்கள், (2) நீர் வானிலை ஆராய்ச்சிக்குரிய தகவல் முறைமை ஆகியவற்றை நவீனமயப்படுத்தலும் தரமுயர்த்தலும் மற்றும் (3) பல்துறை நீர் வளங்கள் திட்டமிடல் என்பனவாகும். கடன் மற்றும் மானிய உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 8,217.29 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 72.21 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 7,494.07 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 65.88 மில்லியன் அல்லது 91.23 சதவீதம் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்க உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2008 யூன் 30 இல் தொடங்கியிருந்ததுடன் 2013 யூன் 30 அளவில் பூர்த்தியாக்க வேண்டுமன பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும் 2011 யூலை 7 இல் நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சரவைத் தீர்மானத்தின்படி செயற்திட்டக் காலம் 2015 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**நிதியளித்தல் திட்டம்**

கடன் உடன்படிக்கையின்படி, உள்நாட்டு நிதிகள் உள்ளடங்கலான செயற்திட்டத்தின் நிதியளித்தல் திட்டம் கீழே காட்டப்பட்டவாறு ஐ.அ.டொலர் 72.21 மில்லியனாகும்.

| உடன்படிக்கை | வகுதி | எஸ்டிஆர் மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
|---|---|---|---|---|
| ஐடிஏ-சீஈ-4406 கியூ-5200 கடன் | வேலைகள் | 18.70 | 29.72 | 3,395.59 |
| | உபகரணங்கள், வாகனங்கள், ஆலோசனை சேவைகள் மற்றும் பயிற்சியளித்தல் என்பவற்றினை உள்ளடக்கிய பொருட்கள் | 18.77 | 29.84 | 3,409.30 |

| | | | | |
|---|---|---|---|---|
| | அதிகரிக்கும் செயற்பாட்டுக் கிரயம் | 0.88 | 1.40 | 159.95 |
| | செயற்திட்ட தயார்படுத்தல் முற்பண மீளளிப்பு | 0.32 | 0.51 | 43.07 |
| | ஒதுக்கப்பட்டிருக்காதவை | 2.43 | 3.86 | 441.02 |
| | உபமொத்தம் | 41.10 | 65.33 | 7,448.93 |
| ஜடீஏ-ரீஎவ் 056901 மானியம் | ஆலோசனை சேவை | | 0.50 | 41.04 |
| | பொருட்கள், பயிற்சியளித்தல் மற்றும் அதிகரிக்கும் செயற்பாட்டுக் கிரயம் | | 0.05 | 4.10 |
| இலங்கை அரசாங்கம் | | | 6.33 | 723.22 |
| | **மொத்தம்** | | **72.21** | **8,217.29** |

### 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றையும் கணக்காய்வு

உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்றும் நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர் ஆகியவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் மற்றும் மானியங்கள் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடன் மற்றும் மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடன் மற்றும் மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் நிதிககூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) முன்னைய ஆண்டுக்கான எனது கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கி நடக்கப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது பரிசோதனையிலிருந்து தென்படுகின்ற மற்றும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானது இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்களானவை (எஸ்ஓஈஎஸ்) உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) முன்னைய ஆண்டுக்கான எனது கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கி நடக்கப்பட்டிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 938.45 மில்லியன் கூட்டு மொத்தத் தொகையான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயம் செயற்திட்டத்தின் நேரொத்த விபரங்களில் காட்டப்பட்ட ரூபா 1,013.43 மில்லியன் கூட்டு மொத்தத் தொகையான சொத்துக்களின் பெறுமதியுடன் உடன்பட்டிக்கவில்லை. மேலும் பல்துறை துறைரீதியான நீர் வளங்கல் திட்டமிடலின் கீழ் நிலத்தடி நீர் கண்காணிப்பு முறைமையின் பயன்பாட்டிற்காக 2012 ஆம் ஆண்டில் செயற்திட்டத்தால் ரூபா 83.87 மில்லியனில் கொள்வனவு செய்யப்பட்ட 04 மோட்டார் வாகனங்கள் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டுவதற்குப் பதிலாக தவறாக வேலைகளின் பெறுமதியின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன்/ மானிய உடன்படிக்கையின் பிரகாரம் வழங்கப்பட வேண்டுமென உடன்பட்ட தொகை | | பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | நிதிகளின் பயன்பாடு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2014 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ. டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ஐ.அ. டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் | ஐ.அ. டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் |
| ஐடிஏ | 65.88 | 7,494.07 | 1,921.00 | 14.92 | 1,920.69 | 57.64 | 7,028.36 |
| இலங்கை அரசாங்கம் | 6.33 | 723.22 | 350.00 | 1.73 | 224.96 | 6.99 | 826.29 |
| **மொத்தம்** | **72.21** | **8,217.29** | **2,271.00** | **16.65** | **2,145.65** | **64.63** | **7,854.65** |

### 3.2 பௌதீக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அணைக்கட்டுப் பாதுகாப்பு மற்றும் செயற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்தல் கூறின் கீழ் வழங்கப்பட்ட 31 ஒப்பந்தங்களில், 19 ஒப்பந்தங்கள் மாத்திரம் 2014 திசெம்பர் 31 இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. மேலும், அணைக்கட்டுப் பாதுகாப்பு வினைத்திறனை மேம்படுத்தல் செயற்பாடுகளின் மேலதிக வேலைகளிற்கான 12 ஒப்பந்தங்கள் ரூபா 612.7 மில்லியன் கிரயத்தில் வழங்கப்பட்டிருந்ததுடன் அதில், 02 ஒப்பந்தங்கள் 2015 யூன் 18 இல் உள்ளவாறு 30 சதவீதத்திற்க கீழான மெதுவான முன்னேற்றத்தை காட்டியிருந்தது. மேலும், பொல்கொல்ல மற்றும் நச்சடுவவில் நீர்த்தேக்கங்களிற்கு அப்பால் திருத்தும் வேலைகளிற்கான இன்னுமொரு 02 ஒப்பந்தங்கள் 2014 திசெம்பரில் வழங்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்ட நடவடிக்கைகள் 2015 யூன் 30 அளவில் முடிவுறுத்தப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் 2015 ஒக்தோபர் அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது.

(ஆ) தேசிய நீர் பாவனைத் திட்டம், நாளதுவரையாக்கப்பட்ட மகாவலி நீர் வள அபிவிருத்தித் திட்டம் மற்றும் முந்டேனி ஆற்றுப் பள்ள அபிவிருத்தி திட்டம் போன்ற அபிவிருத்தி திட்டங்கள் ரூபா 479 மில்லியன் கிரயத்தில் 2013 இல் செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 2015 மே 31 வரையும்

அமைச்சரவையால் அத்தகைய திட்டங்களிற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பல்துறை நீர் வளத் திட்டமிடலின் கீழ் செயற்திட்டத்தால் சாத்தியவளக் கற்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன்விளைவால், அவற்றில் ஒதுக்கப்பட்ட ரூபா 187 மில்லியன் தொகை பயன்படுத்தப்படாது இருந்தது.

(ஈ) செயற்திட்டமானது பல நீர்த் தேக்க அணைகளினுடைய திருத்த வேலைகளிற்காக மதிப்பீடுகள் தயாரிப்பதற்கு வெளிநாட்டு ஆலோசனை நிறுவனமொன்றிற்கு ரூபா 491 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் ஒப்பந்தமொன்றை வழங்கியிருந்ததுடன் ஆலோசனை நிறுவனம் உடன்பட்டவாறு மதிப்பிடப்பட்ட கிரயத்தில் அவற்றின் மீது அறிக்கை சமர்ப்பித்திருந்தது. எவ்வாறாயினும் செயற்திட்டமானது ரூபா 612.7 மில்லியன் பெறுமதியான மேலதிகமான திருத்த வேலைகளை பின்னர் இனங்காணப்பட்டிருந்தது.

## 3.3. சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தால் ரூபா 170.4 மில்லியன் கிரயத்தில் 03 அகழ்வு இயந்திரங்கள், 08 டிப்பர்கள் மற்றும் 03 ஏரியல் நடைபாதை இயந்திரங்கள் என்பன கொள்வனவு செய்திருந்தமை அவதானிக்கப்பட்டது. அத்தகைய இயந்திரங்கள் குறித்த பயன்கள் அக்கறை வெளிப்படுத்தல்கள் கோருவதற்கு முன்னர் முறைப்படி இனங்காணப்பட்டிருக்காததுடன் இலங்கை மகாவலி அதிகாரசபை மற்றும் நீர்ப்பாசன திணைக்களத்தின் பாவனைக்கு ஒதுக்கப்பட்டிருந்தது.

## 3.4. ஒப்பந்த நிர்வாகம்

நாளந்தா அணைகளினுடைய திருத்தும் வேலைகளிற்காக ரூபா 382.99 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 2013 மே 28 இல் வழங்கப்பட்ட ஒப்பந்தம் மீது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மதிப்பிடப்பட்ட கிரயத்தின் பிரகாரம், நாளந்தா அணைகளினுடைய திருத்தும் வேலைகளிற்கான மொத்தக் கிரயம் ரூபா 267.9 மில்லியனாக இருந்ததது. எவ்வாறாயினும், ரூபா 254.5 மில்லியன் பெறுமதியான முரண் கட்டளைகளும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்தகாரரால் வேண்டப்பட்டிருந்தது. மேலும், ரூபா 160.38 மில்லியன் கிரயத்தில் மேற்கொள்ளப்பட்ட புதிய வேலைகளும் இருக்கின்ற ஒப்பந்தத்திற்கு முரணாக வகைப்படுத்தப்பட்டதுடன் புதிய உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் அவற்றின் மீது ரூபா 32.08 மில்லயன் தொகையான தொழிலாரம்பிப்பு முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஒப்பந்தகாரருக்கான வசதிகளை வழங்குவதற்கு மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தல் ரூபா 2.5 மில்லியன் செலவழிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், அவற்றின் மீதான எவ்வித ஆவணச் சான்றுகளும் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

**3.5. நிதிக்கட்டுப்பாடு மீதான விடயங்கள்**

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளிற்காக மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டுச் சபை மீதான அறிக்கைகள் நிதிப்பிரமாண இல. 756 இல் வேண்டப்பட்டவாறு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1978 திசெம்பர் 19 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை சில 842 இல் வேண்டப்பட்டவாறு நிலையான சொத்துக்களின் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

**3.6. மனித வள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் ஆலோசனையாளர் பதவிகள் அங்கீகரிக்காத போதிலும் அத்தகைய பதவிகளிற்காக குறுகிய காலத்திற்கு இரண்டு ஆலோசனையாளர்கள் செயற்திட்டத்தால் சேர்க்கப்பட்டிருந்தனர். எவ்வாறாயினும், எந்தவொரு குறித்த வேலை ஒதுக்கீடுகள் அல்லது கடமைப்பட்டியல்கள் போன்றன அவர்களிற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒரு ஆலோசனையாளர் கொள்வனவு நிபுணருக்கு கொள்வனவு உதவியாளராக சேவையாற்றியுள்ளார் என அவதானிக்கப்பட்டது.

(ஆ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு, தேவையான தகைமைகள் மற்றும் அனுபவங்களை கொண்டிராத இரண்டு பொறியியலாளர்கள் மற்றும் இரண்டு கணக்காளர்கள் 2014 சனவரி 01 இலிருந்து சேர்க்கப்பட்டிருந்தனர்.

**3.7 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

பின்வரும் விடயங்கள் முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும், 2014 திசெம்பர் 31 வரையும் அவற்றின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) சேனநாயக்க சமுத்திரம், சமநல வேவ மற்றும் விக்டோரியா நீர்த்தேக்க அணைகள் தொடர்புபட்ட விடயங்களில் விசேட கற்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொல்கொல்ல சுரங்கப்பாதையின் மேலதிக வேலைகளில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) அமுலாக்கல் முகவர்களின் வளவில் இருந்த பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

(ஈ) செயற்திட்டத்தின் பதவியணியினருக்கான மேலதிக நேரக் கொடுப்பனவுகள் மற்றும் வெளிநாட்டு பிரயாணப் படிகள்.